# வானம் பிளந்ததோ என வையகத்தை மிரளவைத்த ‘மிக்ஜாம்’ புயல் வெள்ளப் பேரிடரிலிருந்து ஓய்வறியா முதல்வர் ஆட்சியில் அயராது பணியாற்றி மக்கள் துயர் துடைக்கும் கழக அரசு!



நேற்று (06.12.2023) காஞ்சிபுரம் மாவட்டம் செம்பரபாக்கம் ஏரியிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்படுவதை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ. அன்பரசன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன், திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வபெருந்தகை ஆகியோர் உள்ளனர்.




சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். அருகில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாவட்டச் செயலாளர் சிற்றரசு, பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் உடனிருந்தனர்.




கழக தலைவர், முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் ஆவடி திருமுல்லைவாயில் பாரதி நகரில் மின்கம்பிகள் சேதமடைந்த நிலையில் நடைபெறும் பணிகள் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்க உடனடி துரித நடவடிக்கைகளை மேற்கொண்டார். முன்னாள் பால்வளத் துறை அமைச்சர் ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம். நாசர், மாநகராட்சி மேயர் உதயகுமார் மற்றும் அரசு துறை அதிகாரிகள்,கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் சென்னை, மிக்ஜாம் புயல் மீட்பு மழை பாதிப்பு நிவாரணப் பணிகளுக்காக சென்னை திருவொற்றியூர் பக்கிங்காம் கால்வாயில் நீர்வரத்து நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நீர்வரத்து அதிகரித்து எர்ணாவூர் முல்லைநகர், ஜோதிநகர், சத்தியமூர்த்தி நகர், கலைஞர் நகர், வி.பி.நகர், ஆண்டாக்குப்பம், மணலி, சின்னசேக்காடு போன்ற பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்ததால், சத்தியமூர்த்தி நகர் போன்ற அவதிக்குள்ளான பகுதிகளுக்கு படகு மூலம் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து அவதிக்குள்ளான 500க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உணவு வகைகள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கினார். உடன் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.பி.சங்கர் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் உள்ளனர்.



‘மிக்ஜாம்’ புயல் காரணமாக, சென்னை வேளச்சேரியில், கனமழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டப் பகுதிகளை ஆய்வு செய்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிவாரணப் பொருள்கள் வழங்கினார்.



திருவல்லிக்கேணி கிருஷ்ணாபேட்டையில் மழையின் காரணமாக பொதுமக்களுக்கு உதவி பொருள்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். தயாநிதிமாறன் எம்.பி., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் சிற்றரசு ஆகியோர் வழங்கினர்.




மருத்துவம் மற்றும் மா.சுப்பிரமணியன் நேற்று (06.12.2023) தேனாம்பேட்டையில் உள்ள பொது சுகாதாரம் மற்றம் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில் 300 நடமாடும் மருத்துவ வாகனங்களை மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்தார். இந்நிகழ்வில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மரு.எழிலன் நாகநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாட்டுத்துறை ஆணையர் லால்வேனா, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், பொது சுகாதாரம் மற்றம் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.




மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை உள்ளிட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாமக்கல் மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு நிவாரண பொருட்களை சென்னைக்கு 2 கனரக வாகனங்களில் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், அரசு தலைமை கொறடா முனைவர் கோவி. செழியன் கொடியசைத்து அனுப்பி வைத்தனர்.